

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## நேற்றும், இன்றும், என்றும் ஜெயம் தருபவர்!

சீயோன் குமாரத்தியின் ‘ராஜாவாக’ ஒரு கழுதைக் குட்டியின் மீது ஏறி, நம்மிடம் வருகிறார்! என்ற நற்செய்தி இன்றும் நம் எல்லோருக்கும் உரியதாகும்! கடைசி யுத்தத்தில் ‘சத்துருக்களை ஜெயித்திட’ அவர் வெண் குதிரையில் வருவார்! இப்போதோ, பூமியில் வாழும் தம்முடையவர்களை விசாரித்து, கண்ணீர் துடைத்து, ஆறுதல் செய்திட, அவர் தாழ்மையான கழுதை குட்டியின் மேல் ஏறி நம்மிடம் வருவது, நாம் நாள்தோறும் பெற்ற பாக்கியமன்றோ! கர்த்தர் நமக்குச் செய்த, இனி செய்யப்போகிற மகத்துவமே “முன் நடப்பாரும் பின் நடப்பாரும் ஓசன்னா! கர்த்தரின் நாமத்தில் வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்..... ஓசன்னா!” என்ற ஆர்ப்பரிப்பு! இந்த பாக்கியம் ‘அவருக்கு சொந்தமான’ எல்லோருக்கும் உரியதாகும்! (மாற்கு 11:9).

இன்று, எங்களுக்கு நேர்ந்த இன்னல் நேரத்தில், ‘ஜெயம் தருபவர்’ இதோ, எங்களிடம் வந்து கொண்டிருக்கிறார்! என்பதே, முன் நடப்பாரின் ஓசன்னா! நேற்று சந்தித்த உபத்திரவத்தில், ‘ஜெயம் தந்தவர் எங்கள் ராஜா’ இதோ, ஜெயித்து முன்செல்கிறார்! என்பதே பின்நடப்பவரின் ஓசன்னா! இந்த ஓசன்னா ஜெய முழக்கம் அவரை ராஜாவாய் கொண்ட அனைவருக்கும் ‘நேற்றும், இன்றும்’ என்றும் உண்டு!

*-tr*

பெட்டகம் 39 நவம்பர் 2023 பரல்கள் 11




## ஸ்தாபன பலகையா? தெய்வ அன்பின் ஐக்கியமா?

தேவனோடு நெருங்கிய ஐக்கியத்தைப் பெறாதவர்கள், ஐக்கியத்தை பேசவோ அல்லது உருவாக்கவோ முற்படும்போது, "நீங்கள் கொஞ்சம் விட்டுக்கொடுங்கள், நாங்கள் கொஞ்சம் விட்டுக் கொடுக்கிறோம்" என்றே சத்தியத்திற்கு சமரசம் பேச வேண்டியதாயிருக்கும்!

பெந்தெகோஸ்தே நாளில் தேவ ஆவியானவர் இறங்கி சீஷர்களை நிரப்பினபோது, கிறிஸ்துவின் அன்பின் ஜீவனாலே அவர்கள் நிரப்பப்பட்டபடியால், பற்பல வித்தியாசங்களுள்ள திரளான விசுவாசிகள் "ஒரே இருதயமும் ஒரே மனமும்" உள்ளவர்களானார்கள். அவர்கள் தேவ அன்பினால் நிறைந்தபடியால்.... எப்படி ஐக்கியப்படலாமென்று வருஷ கணக்கில் விவாதிக்காமல், சில நிமிஷத்தில் ஒற்றுமையடைந்தார்கள்!

கிறிஸ்துவை நமது கண்முன் நிறுத்தி, அவரது அன்பின் சாயலுக்கொப்பாக மாற்றப்படுவதை நாம் பிரதானமாகத் தேடினால், ஆண்டவர் வேண்டிக்கொண்ட ஐக்கியத்தை நமக்குள்ளே காணலாம்! மற்றபடி எழுத்திலே இணைந்த CSI அல்லது IPC அல்லது LEF அல்லது CPM.... என, மூன்றெழுத்து ஐக்கிய குழுக்களுக்கு இன்று பஞ்சமேயில்லை! என்னதான் இவர்கள் 'ஐக்கியம்' என்ற பெயரை தங்கள் சபைக்கு வைத்துக்கொண்டாலும், உண்மையான ஐக்கியம் அவர்களுக்குள் வராது! "பிதாவே, நான் உம்மிலும்! நீர் என்னிலும்! இவர்கள் நம்மிலும்!" (யோ.17:21) என்ற உறவே, இயேசு வேண்டிக்கொண்ட ஐக்கியம்!

தேவ அன்பும், அதைத் தொடர்ந்து வரும் சகோதர அன்புமே திருச்சபையின் அழகு! இன்றும் அப்படிப்பட்ட ஐக்கியத்தையே நமக்கு ஆண்டவர் வாய்க்கச் செய்வாராக!
*-Ed*

### 2024 'பரலோக பொக்கிஷங்கள்' சந்தா புதுப்பிக்கவும்

வருட சந்தா ரூ.170/- ஆன்லைன் அல்லது **M.O.** மூலம் டிசம்பர் 10-ம் தேதிக்குள் புதுப்பித்துக்கொள்ள வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் 'புதிது' என்று குறிப்பிடவும். நன்றி!

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்! சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்)
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 9843049935 Ph (O) 0452 - 3585200
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## ‘ஆபிரகாமின் ஆசீர்வாதம்’ உங்களுக்கு உண்டு!

*விசுவாசத்தினாலுண்டாகும் பொறுமை வாக்குதத்தம் சுதந்தரிக்கும்*

*“ஆபிரகாம் சோதிக்கப்பட்டான்” என்ற வாக்கியம் அவனுடைய வாழ்க்கையில் ஓர் தொடர்ச்சியான அனுபவமாய் இருந்தது! பல்வேறு சோதனைகள் அவரின் ஜீவகாலமெல்லாம் அவரைத் தொடர்ந்தது: சாத்தான் மூலமாய் சோதிக்கப்பட்டார்! பொறாமையாலும், அவபக்தியாலும், அவிசுவாசத்தினாலும் நிறைந்த பல்வேறு மனிதர்களாலும் சோதிக்கப்பட்டார்! தன்னுடைய சொந்த மனைவி சாராளின் மூலமாய் ‘அவளுடைய அவசரத்தன்மையைக் கொண்டும்’ சோதிக்கப்பட்டார்! இவ்வாறு, எப்பக்கத்திலிருந்தும் சோதனை சூழ்ந்தாலும், அவை யாவற்றையும் ஆபிரகாம் பொறுமையோடே சகித்துக்கொண்டார்! ஆபிரகாம், ‘தேவனுடைய உத்தமத்தை’ சந்தேகப்பட்டு கேள்வி கேட்கவில்லை! அவருடைய வல்லமையை மட்டுப்படுத்தி சிந்திக்கவில்லை! வாக்குரைத்த தன் ஆண்டவர் மீது சலிப்படையவில்லை! அழைத்தவருடைய அன்பிலிருந்து தள்ளி நின்று தேவனுடைய மனதை துக்கப்படுத்தவில்லை!*

> **இவ்வாறாக அளவற்ற தேவனுடைய ஞானத்திற்குப் பணிந்து அடங்கியிருந்தார்! தாமதத்தை மௌனமாய் ஏற்றுக்கொண்டார்! ‘கர்த்தருடைய நேரம் வரட்டும்!’ என்றே காத்திருந்தார்.... இவ்வாறு, ஒரு நீண்ட பொறுமையோடு ஆபிரகாம் சகித்திருந்தபடியால் “வாக்குதத்தத்தை” பெருமகிழ்ச்சியோடு சாட்சியாக பெற்றுக்கொண்டார்!**

*தேவனுடைய வாக்குதத்தங்கள் ‘சாதனைகளைப் பெற்றுத்தராமல்’ இருந்ததில்லை! பொறுமையோடு காத்திருந்தவர்களில் ஒருவர்கூட* **வெட்கப்பட்டுப்போனதில்லை!** *இவ்வாறு, விசுவாசத்தோடு எதிர்பார்த்து காத்திருந்த அனைவரும் அங்கீகாரத்தைப் பெற்றார்கள்!*

*பொறுமையோடு காத்திருந்த ஆபிரகாமின் அடுத்த பக்கத்தை அறிவீர்களா?:*

1. *பக்தியான ஆபிரகாமின் விசுவாசம் ‘அவசரப்படும் ஆவியை’ கண்டிக்கிறது!*

2. பதட்டமான 'முறுமுறுப்பை' சிட்சிக்கிறது!

3. பொறுமையாய் இருப்பவர்களை அணைத்துக் கொள்கிறது!

4. ஓர் அமைதியான ஆவியோடு, தேவசித்தத்திற்கும் அவருடைய வழிக்கும் அடங்கி இருக்கும்படி ஊக்கம் தருகிறது!

பார்த்தீர்களா, ஆபிரகாம் பலத்த விதமாய் சோதிக்கப்பட்டார், ஆகிலும் பொறுமையோடு காத்திருந்து வாக்குதத்தத்தைப் பெற்றார்! சம்பூரண ஆசீர்வாதமும் அவருக்கு கிடைத்தது!!

இத்தனை அருமையான மாதிரியை நீங்களும் பின்பற்றிவிட்டால் நலமல்லவா? அப்போது நீங்களும் 'ஆபிரகாமின் ஆசீர்வாதத்தை' சுதந்தரித்து அதை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்திட முடியும்!

- Mrs.சார்லஸ் கஃவ்மென்

---

## 'விசுவாசத்திற்கு' ஜெயத்தின் மேல் ஜெயம் உண்டு!

*பெலன் குன்றா விசுவாசத்திற்கு 'காலேப்' முன் மாதிரி*

தேவன் நமக்கென்று வைத்திருக்கும் மகிமையான இலக்கை அடைவதற்கு நாம் யாவரும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்றிருக்க வேண்டும்! ஏனென்றால், மாம்சத்தில் குடிகொண்டிருக்கும் எல்லா தீமைகளையும் மேற்கொள்வதற்கு **பரிசுத்த ஆவியானவர் மாத்திரமே** வல்லமையுள்ளவராய் இருக்கிறார். இதை வேதம் கூறும்போது "ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்" எனக் கூறுகிறது (கலா.5:16).

**இப்படி ஒரு வல்லமையான செயல் பழைய உடன்படிக்கையில் கூடாததாய் இருந்தது! இப்போதோ 'பரிசுத்த ஆவியைப் பெற்ற' நாம் 'எல்லாம் கூடும்' என்ற பாக்கியம் பெற்றிருக்கிறோம் (ரோமர் 8:3).**

இப்போது நாம் இயேசுவின் அடிச்சுவடுகளிலும், அப்போஸ்தலர் சென்ற அடிச்சுவடுகளிலும் நடந்து செல்லும் ஜெயத்தையும் மகிழ்ச்சியையும் பெற்றிருக்கிறோம். ஆகையால், வாக்குதத்தத்தின் எல்லா சுதந்திரத்தையும் பெற்றுக்கொள்ள உரிமையும் பெற்றிருக்கிறோம். இந்த விசுவாசத்தையும் நம்பிக்கையையும் பெற்று, நித்திய பயணத்தில் முன் செல்கின்ற 'யாவரையும் பலப்படுத்தி' கர்த்தர் ஆசீர்வதித்திருக்கிறார். அவர்கள் யாவருக்கும் தன் வாக்குதத்தங்களை அருளிச் செய்து கனப்படுத்தியிருக்கிறார்.

இவ்வித உத்தம பயணத்தில் 'காலேப்' இருந்தபடியால், வயதாகிவிட்ட அவருக்கு, பலத்தையும் நீண்ட ஆயுளையும் கர்த்தர் அருளிச்செய்தார். **வனாந்திரத்திலிருந்து வாக்குதத்த பூமிக்குச் செல்லும்**

**பயணத்தில்,** ‘*காலேப்*’ தன் ஆண்டவராகிய தேவனுக்கு மகா உண்மையுள்ளவராய் இருந்தார்! மேலும் மோசேயின் மூலமாய் காலேப்புக்கு தந்த வாக்குதத்தத்தின்படி ‘**எபிரோனை**’ சுதந்திரமாய் பெற்றார்! அதைக்குறிப்பிட்டு காலேப் கூறும்போது “தேசத்தை வேவுபார்க்க நான் அனுப்பப்பட்டபோது **எனக்கு நாற்பது வயதாயிருந்தது.** நான் தேசத்தின் நன்மையை என் இருதயத்தில் உள்ளபடியே மோசேக்கு நல்ல செய்தியை கொண்டு வந்தேன். அந்நாளிலே மோசே ‘நீ உன் தேவனாகிய கர்த்தரை உத்தமமாய் பின்பற்றினாய்’ ஆகவே உன் கால்மிதித்த தேசம் உனக்கும் உன் பிள்ளைகளுக்கும் சுதந்தரமாய் இருக்கக்கடவது என்று சொல்லி ஆணையிட்டார்.

> இதோ, கர்த்தர் சொன்னபடியே என்னை உயிரோடே காத்தார். **இன்று நான் எண்பத்தைந்து வயதுள்ளவன்!** அன்று எனக்கிருந்த பெலன் **இந்நாள் வரைக்கும் எனக்கிருக்கிறது.....**

யுத்தத்திற்கு போக்கும் வரத்துமாயிருக்கிறதற்கு அப்போது எனக்கிருந்த பெலன் இப்போதும் எனக்கு இருக்கிறது” என கெம்பீரமாய் சாட்சி கூறினார் (யோசுவா.14:7-11). இவ்வாறு எழுதப்பட்ட வாக்கியங்கள் அனைத்தும் ‘நமக்கு மாதிரியாகவே’ எழுதப்பட்டுள்ளன. அதாவது, அவன் பெற்றிருந்த விசுவாசமே அவனுக்கு ஜெயத்தைத் தந்தது. அவன் எதிர்கொண்ட சத்துரு எவ்வளவு உயரமாயும் எவ்வளவு வல்லமை கொண்டவனாயும் இருந்தாலும், **அது காலேபை பயமுறுத்த முடியவில்லை.** தேவனுடைய வாக்குதத்தம் அவனுக்கு முன்பாக இருந்தபடியால் “ஜெயத்தின்மேல் ஜெயத்தை அடைந்தான்”.

உண்மைதான், “தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக்கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்” (2தீமோ.1:7). இந்த பரிசுத்த ஆவியானவரே, நாம் கிறிஸ்துவையும் திரளான பரிசுத்தவான்களையும் தொடர்ந்து பின்பற்றி வருவதற்கு ‘உந்துதலாய்’ இருக்கிறார்! ஆகிலும், அன்று பவுல் கூறியதைப்போல் “அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள்! அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்கு பகைஞரென்று உங்களுக்கு கண்ணீரோடு சொல்கிறேன்” (பிலி.3:18) என பவுல் அன்று கூறியதைப்போலவே, இன்றும் அதே நிலையில்தான் அனேகர் இருக்கிறார்கள். இவர்கள், இயேசு நம்முடைய பாவநிவர்த்திக்காக கல்வாரியில் சுமந்த, **“மரத்திலான சிலுவைக்கு” பகைஞர்கள் அல்ல! ஆனால் கிறிஸ்துவை பின்பற்றும் ‘அனுதின சிலுவைக்கு’ இவர்கள் பகைஞர்களாய் மாறி....** மாம்சத்தின் இச்சைகளையும், சுயத்தின் வலிமையையும் எதிர்த்து நிற்க திராணியில்லாமல் பெலனற்று வீழ்ச்சியடைகிறார்கள்!

**அவர் காட்டிய சிலுவையின் வழியில் நாம் நடக்கவில்லையென்றால், நம் மாம்சத்தில் குடிகொண்டிருக்கும் அத்தனை தீமைகளும் மேலோங்கி நின்று நம்மை பிரிவினைக்கும், விவாகரத்துக்கும், சமாதானமின்மைக்கும், பொறாமைக்கும் மற்றும் இவ்வுலகத்திலுள்ள எல்லா கவலைக்கும் நம்மை இழுத்துச்சென்று மூழ்கடித்துவிடும்!**

*ஆகவேதான் இயேசு "எல்லோரையும் நோக்கி, ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தானே வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என அறைகூவல் விடுத்தார். இந்த சிலுவையை 'பரிசுத்தாவியின் பெலன் கொண்டு' நம்முடைய ஜீவியத்தில் கிரியை செய்திட அனுமதித்தால் "நம் சுய ஜீவியத்திலிருந்து எழும்பும் எல்லாத் தீமைகளுக்கும் ஒவ்வொருநாளும் மரணத்தை கொண்டுவரும் அதே சமயத்தில், நம் இருதயமோ சகல பரிபூரண நன்மையினாலும் நிறைந்துவிடும்!" ஆம், அவ்வாறு நடந்திட முடியும் என்பதையே அப்போஸ்தலர் 9:31 மகிழ்வுடன் நமக்கு சுட்டிக்காட்டுகிறது: "அப்பொழுது யூதேயா, கலிலேயா, சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் சமாதானம் பெற்று, பக்திவிருத்தி அடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும்* **பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும்** *நடந்து பெருகின!" என்ற பாக்கியம், அபிஷேகத்தில் நிறைந்து சிலுவையின் பாதையில் நடக்கும் சபை மக்களுக்கு கிடைத்துவிடும்! ஆமென்.*

*- அக்ஸல் J. ஸ்மித்*

---

## புனிதர்கள் ஏன் சபையில் உருவாகவில்லை?

*'புனிதர்கள் வேண்டும்' என்பதே சபையின் எழுச்சி*

*தங்களை கிறிஸ்தவர்கள் என அழைத்துக்கொள்ளும் 'இன்றைய சந்ததியார்' தரம் குறைந்த போதனைக்கும், தடுமாற்றமான கற்பு நெறிக்கும், வேத ஆதாரமற்ற நடத்துதலுக்கும் அல்லது வேதம் கூறாத அதிகபட்ச போதனைகளுக்கும் உள்ளாகி இருப்பது வேதனை நிறைந்ததாகும். இதன் விளைவு 'ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும்' மிகுந்த பாதிப்பை கொடுத்து, அவனுடைய கிறிஸ்தவ விசுவாச வளர்ச்சியை சீர்குலைத்ததுமல்லாமல், அவர்கள் உலகத்தில் பின் வாங்கி சரிவடைந்த நிலையை காண்கிறோம்!*

*வேதமோ "நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்!" என்றே நமக்கு கட்டளையிடுகிறது (2பேதுரு 3:18). ஆனால், ஒரு வாலிபன் தொடங்கி வயோதிப நபர் வரை உள்ள ஒவ்வொரு*

*கிறிஸ்தவனும்* **'தான் வளர்ச்சியடையவில்லை'** *என்ற சோகத்தை அறியாமலே வாழ்வதுதான் மிகப்பெரிய வேதனையாய் இருக்கிறது. இந்த உண்மையை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்கள், கொரிந்தியருக்கு எழுதப்பட்ட முதலாம் நிருபத்தையும், எபிரெயர்களுக்கு எழுதப்பட்ட நிருபத்தையும், ஆதி சபையின் சரித்திரத்தையும் படித்து பார்த்தால், அதுவே இவர்களின் பின் தங்கிய நிலைக்கு* **நிரூபணமாய்** *இருக்கிறது.*

**இவர்கள் தங்களை ஆவிக்குரியவர்கள் என்று எண்ணிக்கொண்டு 'மாம்ஷீக கிறிஸ்தவர்களாய்' வாழ்ந்தார்கள் என இந்த நிருபங்கள் சுட்டிக்காட்டுகிறது!**

*இன்றைய கிறிஸ்தவர்களில் பெரும்பாலோர் தங்களைத் தாங்களே அளந்து பார்த்து திருப்தி காண்கிறார்கள்! உயர்ந்த மலையின் சமபூமிக்கு அழைக்கும் ஆவிக்குரிய உந்துதலின் ஆர்வத்தை இவர்கள் கொஞ்சம் கொஞ்சமாய் நஷ்டப்படுத்தி, அந்த ஆர்வத்தையே முற்றிலும் இழந்துவிட்டார்கள். இதன் விளைவு என்னவென்றால்* **இன்றைய கிறிஸ்தவ உலகம் 'பரிசுத்தவான்களை உருவாக்கவில்லை'** *என்ற மிகப்பெரிய நஷ்டந்தான்! ஜனங்களை கிறிஸ்தவ மார்க்கத்திற்கு மாற்றிக்கொண்டு வர மாத்திரமே இவர்களால் முடிந்தது. இன்னும் கொஞ்சம் அதிகமாய், தங்களை 'புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்கள்' எனக்கூறும் பெருமையை அவர்கள் பெற்று விட்டார்கள், அவ்வளவுதான்.*

**நம்முடைய காலங்களில் காணப்படும் பெரும்பாலான கிறிஸ்தவர்கள், வேதம் கூறும் மெய்யான புனிதத்தன்மையை பரிகாசம் செய்திடும் அவலத்தில் காணப்படுகிறார்கள்!**

*காரியத்தின் கடைத்தொகையாக, ஆண்டவர் கொண்டிருக்கும் மனபாரத்தை கேளுங்கள்: "இன்றிலிருந்தாவது சபையில் தலைவராயிருப்பவர்கள், தங்கள் சபை மக்களை தலைசிறந்த கிறிஸ்தவர்களாய் மாற்ற முயற்சி எடுப்பார்களாக". கிறிஸ்தவ மார்க்கத்திற்கு மாறிவந்த இவர்களை 'கொஞ்சமும் தரம் குறையாமல்' புதிய ஏற்பாடு வலியுறுத்தும் புனித வாழ்க்கையை அவர்களிடம் பிரயாசப்பட்டு முயற்சிப்பார்களாக!*

**இருதயத்தின் பரிசுத்தம்! அனல் கொண்ட அன்பு! உலகத்திலிருந்து வேறுபிரிந்து வாழும் வாழ்க்கை! கிறிஸ்துவின் மீது காண்பித்திடும் அளவில்லாத தியானம்!.... ஆகிய உயர்ந்த பரிசுத்தவானுக்குரிய தகுதிக்கு அவர்கள் ஒவ்வொருவரையும் கொண்டுவர பிரயாசப்படுவார்களாக!**

*இவ்வித வைராக்கியமான பிரயாசம் எடுத்தால் மாத்திரமே*

*‘தாழ்நிலையில் இருக்கும் இன்றைய கிறிஸ்தவத்தை’ தூக்கி எடுத்து, அவர்கள் வாழ்ந்து செழிக்க வேண்டிய வேதபூர்வ வெளிச்சத்திற்கும், விலைமதியா நித்தியத்தின் மதிப்பிற்கும் கொண்டு வர முடியும்! இன்றைய கிறிஸ்தவத்தின்மீது கர்த்தர் இரக்கம் செய்வாராக!*

*- A.W.டோசர்*

---

## என்னை அன்புகூர்ந்து ‘மன கலக்கம்’ ஏற்படாது காத்த கர்த்தர்!

*தம்முடையவர்களுக்கு கர்த்தர் எல்லா நன்மையும் செய்வார்*

தந்தை லா-கோம்பே அவர்கள் ரோம் நகரிலிருந்து திரும்பியவுடன், அவருக்கு வெகுவாய் பாராட்டு நிகழ்ச்சிகள் நடந்தன. அவருடைய நல்ல சாட்சி வாழ்க்கைக்காகவும் அவருடைய போதனைகளுக்காகவும் பாராட்டுதல்களைப் பெற்றார். இவைகளுக்குப் பின்பு, வழக்கமான தன் பணிகளைச் செய்து பிரசங்கிக்கவும், பாவ அறிக்கை ஏற்றுக்கொள்ளும் பாதிரியாகவும் செயல்பட்டார். அவர் பாரீஸ் நகரில் இல்லாதபோது, எனக்கு ஏற்பட்ட எல்லா துன்பங்களிலும் தேவன் என் மீது எவ்வளவு கரிசனை பாராட்டி காத்துக்கொண்டார் எனவும், என்னுடைய சிறிய தேவைகளைக்கூட தயவோடு கர்த்தர் கண்காணித்து விசாரித்ததையும் குறிப்பிட்டு எழுதினேன்.

மேலும், என்னுடைய சொத்து விபரங்களைக் குறித்து எழுதிய பேப்பர்களைக் குறித்த பதில் தகவல் பல மாதங்களாகியும் எனக்கு வரவில்லை. அதைக் குறித்து நான் விசாரிக்காமல் இருப்பதை எனக்கு நட்பான சகோதரிகள் சுட்டிக்காட்டி, அந்த விபரத்தை எழுதிக் கேட்கும்படி வற்புறுத்தினார்கள்.

**ஆனால் நடந்தது என்னவென்றால், அதை வலியுறுத்தி விசாரிக்க, பார்வைக்கு புலப்படாத ‘ஒரு கரம்’ என்னை தடை செய்தது! இதனிமித்தமாய் எனக்குள் ஒரு கலக்கமும் ஏற்படவில்லை!**

மாறாக, எனக்குள் நான் பெற்றிருந்த சமாதானமும் நம்பிக்கையும் சொல்லி முடியாத அளவிற்கு பெருகி இருந்தது! இவ்வித நிலைக்குப் பின்பு, பாரீஸ் நகரிலிருந்த என் உபதேச போதகர், “நான் உங்களை நேரில் சந்தித்து உங்கள் சொத்து விபரப் பட்டியல் பேப்பர்களை உங்களிடமே ஒப்படைத்திட கட்டளைபெற்று வருகிறேன்” என எனக்குத் தெரிவித்தார்! இது, கர்த்தரின் செயலென்று ஆச்சரியப்பட்டேன்!

இதைப்போலவே, பாரீஸ் நகரில் உள்ள என் மகளுக்குத் தேவையான பொருட்கள் அடங்கிய ஒரு பெரிய பார்சல் அனுப்பி வைத்திருந்தேன். ஆனால், தபால் பரிமாற்றத்தில் அந்த பார்சல்

*ஏரியில் தவறி விழுந்து விட்டதாகவும், இனி அதைக் குறித்த தகவல் கிடையாது எனவும் எனக்கு தெரிவித்தார்கள். இந்த சேதி எனக்குள் யாதொரு கலக்கத்தையும் தரவில்லை. அதற்குப் பதிலாக, காணாமற் போன அந்த பார்சல் மீண்டும் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்குள் மலர்ந்திருந்தது. இச்சமயத்தில், பார்சல் சம்பந்தப்பட்ட அலுவலர் அந்தப் பார்சலை ஒரு மாதம் முழுவதும் எனக்காக விசாரித்து தேடினார். ஆகிலும் அவருக்கு அது கிடைக்கவில்லை. மூன்று மாதங்களுக்குப் பிறகு அந்த பார்சல் திரும்ப என்னிடம் கொண்டுவரப்பட்டது. இதில் ஆச்சரியம் என்னவென்றால், அந்த பார்சல் ஒரு ஏழை மனிதன் வீட்டில் கண்டுபிடிக்கப்பட்டது.*

**அந்த ஏழை மனிதன் கூறியது என்ன தெரியுமா? "இந்த பார்சலை என் வீட்டில் யார் வைத்தார்கள்? என்பது எனக்குத் தெரியாது. நானும் அதை திறந்து பார்க்கவில்லை" என அவர் கூறியது, என் ஆண்டவருடைய அளவற்ற பாதுகாப்பை நான் ருசிக்கும்படி செய்தது!**

*இச்சமயத்தில், மற்றொரு நடந்த நிகழ்ச்சியையும் கூறிட உந்தப்படுகிறேன். அது என்னவெனில், ஒரு வருட என் செலவிற்குப் போதுமான பணத்தை பெறுவதற்கென ஒரு தகுந்த நபரிடம் பரிமாற்ற காசோலையை அனுப்பி வைத்தேன். அந்தப் பணத்தை பெற்று வந்த அந்த நபர், அந்த பணத்தை குதிரையின் பின்னாலிருந்த இரண்டு பையில் வைத்துக் கொண்டு வந்தார். அவர் வந்து கொண்டிருந்த இடை நேரத்தில் 'பணப்பையை மறந்து' குதிரையை ஒரு பையனிடம் கொடுத்து வீட்டிற்கு அனுப்பி விட்டார். குதிரை சென்ற வேகத்தில் அந்த பணப்பை ஜெனிவா நகரத்து சந்தையில் விழுந்துவிட்டது. அதே நாளில் பல மணிநேரங்கள் கழித்து, நான் ஜெனிவா மார்க்கெட் சென்ற மறு பகுதியில் என் குதிரையை நிறுத்திவிட்டு இறங்கிய நேரத்தில் "என் பணப்பை என் காலின் கீழாகவே கிடந்தது!" எனக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்தது என்னவென்றால் "இவ்வளவு திரள் கூட்டமான இந்த சந்தையில் என்னுடைய இந்த பணப்பை, எப்படி ஒருவர் பார்வையிலும் படாமல் என் கண்ணில்படும்படி அப்படியே பத்திரமாக கிடந்தது!" என்ற ஆச்சரியம்தான். இவ்வாறு பல சம்பவங்கள் எனக்கு சம்பவித்திருக்கிறது. நான் நன்றியுடன் கூறிக்கொள்ளும் அறிக்கை என்னவென்றால்* **"தேவன் என்னை இடைவிடாமல் பாதுகாத்து வந்தார்!" என்பதே ஆகும்.**

*இதற்கிடையில் ஜெனிவா பிஷப் அவர்கள், என்னை தொடர்ச்சியாக உபத்திரவத்திற்கு உட்படுத்தினார். 'ஜெக்ஸ்' நகரத்தில் உள்ள அவர்களின் தொண்டு நிறுவனத்திற்கு நான் மனப்பூர்வமாய் வழங்கிய*

பல நன்கொடைகளை நன்றியுடன் பெற்றுகொண்டதாக எனக்கு கடிதம் எழுதியிருந்தார்! அதே நேரத்தில், அவரை சந்தித்த முக்கியமான நபர்களிடத்தில் "எங்கள் தொண்டு நிறுவனத்திற்கு மேடம் குயான் அம்மையார் எந்த பணமும் தரவில்லை" என கூறிவிட்டார். மேலும், நான் தங்கியிருந்த மடத்தின் 'தூய கன்னியாஸ்திரீகளிடம்' என்னைப் பற்றி புகார் கூறி, தந்தை லா-கோம்பேயிடம் நான் செல்லாதபடிக்கு தடை ஏற்படுத்த கட்டளை கடிதம் அனுப்பினார். ஆனால், அந்த மடத்தின் தலைமை பொறுப்பாளர் அவ்வாறு செய்வதற்கு வெகுவாய் தயங்கினார். ஆகிலும் அந்த கடிதத்தை பிஷப் மீது கொண்ட மரியாதையினிமித்தம் "பிஷப் இவ்வாறு 'ஏதோ மனநிலையில்' கூறியிருக்கக் கூடும்!" என மழுப்பலாய் கூறிவிட்டார். ஆனால் மடத்திலிருந்த அனைவரும் "மேடம் குயான் சகோதரி எங்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாய் இருக்கிறார். அவர்கள் எங்களோடிருப்பது, தேவன் தந்தருளிய ஈவு!" எனக் கூறிடத் தொடங்கிவிட்டார்கள். இவ்வாறு மெய்யான அன்போடு மடத்தில் உள்ள கன்னியாஸ்திரீகள் கூறிய அறிக்கை, ஜெக்ஸ் மடத்து பிஷப் அவர்களை வெகுவாய் பாதித்து விட்டது:

**ஆகவே "மேடம் குயான் சகோதரி, மடத்திலுள்ள மற்ற எல்லா சகோதரிகளையும் தன் பக்கமாக ஈர்க்கிறார்கள்! ஆகவே, அவர்களை மடத்திற்கு புறம்பாக்க வேண்டும்" எனத் தீர்மானித்துவிட்டார்.**

இவையெல்லாம் எனக்கு தெரிய வந்தபின், மடத்திலுள்ள எல்லா கன்னியாஸ்திரீகளும் மனம் கலங்கி இருக்கிறார்கள் என நான் அறிந்தாலும் 'என் மனதில் ஸ்திரப்படுத்தப்பட்டிருந்த அமைதிக்கு' எந்த சீர்குலைவும் ஏற்படவில்லை!

"தேவ சித்தம்" எனக்கு எது நடந்தாலும் 'சமமாகவே' காண்பித்தது! 'நடந்த நிகழ்ச்சிகள்' எவ்வளவுதான் நியாயமற்றதாயும் அல்லது உணர்ச்சியை தூண்டுவதாயும் காணப்பட்டாலும், அவைகளால் நான் ஈர்க்கப்படாமல், தேவனிடமே ஈர்க்கப்பட்டிருந்தேன். நாம் பழகி வந்த விசுவாசம், 'நம் வாழ்வின் சகலத்தையும்' தேவனுடைய பார்வையில் வெளியரங்கப்படுத்திவிடும். இதனிமித்தமே எளிய ஆத்துமாக்கள் பலவித விவாதங்களினால் மனச்சோர்வுற்றிருப்பதைக் கண்டு, தங்கள் மன துக்கத்தை விளக்கிச் சொல்வதற்கும் அறியாதிருப்பதைக் கண்டு, நான் அவர்களுக்காக பரிதாபப்பட்டிருக்கிறேன்.

**தங்கள் இக்கட்டான நிலைக்கு பல காரணங்களை அவர்கள் கூறுவதுண்டு. ஆகிலும், அது அனைத்தும் அவர்களின் சுய-அன்பேயாகும்.**

*ஆகவேதான், அவர்கள் மனம்விரும்பி கூறுகிற அனைத்துமே அவர்களுக்கு நியாயம்போல் தோன்றுகின்றது! அவர்களின் மனவேதனைகளுக்கு பல காரணங்கள் இருக்கிறது என்பதை நான் அறிவேன். அவை அனைத்தும் நியாயமானதைப்போல் தோன்றினாலும், 'சுய அன்பே' அவர்களின் உண்மை நிலையாகும்!*

*- மேடம் குயான்*

---

## குருவை நேசிக்கும் சீஷர்களே, குருவைப்போல் மாறுவார்கள்!

*முழு அர்ப்பண வாழ்வே, குறைவை நீக்கி, நிறைவுதரும்*

*சீஷன் செவிகொடுக்க வேண்டிய இரண்டு கட்டளைகள் உண்டு. "என் பின்னே வாருங்கள், என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்" என்பதே! இயேசு அவர்களை அழைத்தபோது 1) அவர்கள் அவரைப் பின் சென்றார்கள். 2) அவர் போதித்தவைகளுக்குச் செவிகொடுத்தார்கள். எல்லாவற்றையும் விட்டுப் பிரிந்தார்கள், எஜமானிடத்தில் அன்பு வைத்தார்கள்! அவரோடு கூடவேயிருந்தார்கள்! அவரோடுகூட நடந்தார்கள்! அவர் சத்தத்தைக் கேட்டார்கள்! அவர் திருமுகத்தைப் பார்த்தார்கள்! அவரோடு நித்திரை செய்தார்கள்! அவரோடு விழித்தெழுந்தார்கள்! அவர் உபதேசங்களைக் கவனித்தார்கள்! அவர் கிரியைகளைக் கண்டார்கள்! அவரில் விளங்கிய ஞானம், கிருபை, சாந்தம், தாழ்மை, அன்பு, இரக்கம், அமைதல் முதலான தெய்வீக இலட்சணங்களைக் கவனித்தார்கள்!*

**இருப்பினும், அவர்களானாலும், அவரைக் காணாத நாமானாலும் பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவை கர்த்தரென்று அறிந்துகொள்ள முடியாது!**

*இயேசுவின் சீஷர்கள் ஒரே நாளில் பூரணரானவர்கள் அல்ல! பார்க்கப்போனால் அவர்களைப்போல அப்போஸ்தல ஊழியத்துக்கு தகுதியற்றவர்கள் யாருமில்லை.... சுவிசேஷத்தை வாசித்தால் அவர்களில் எத்தனையோ குறைவுகளைக் காணலாம். அவர்களுடைய இருதயக்கடினம், கண்ணாரக்கண்டும் உணர்வில்லாமை, சாதாரண காரியங்களையும் அறியக்கூடாமை, எஜமான் இன்னாரென்று அறிந்துகொள்ளாமை, எத்தனை உவமைகளால் போதித்தாலும் இராஜ்ஜியத்தின் தன்மையை கிரகிக்கக்கூடாமை, தாவீதின் இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்கிற அவசரம், இராஜ்ஜியத்தில் முதல்தரமான இடத்தை விரும்பிய பேராசை, அதினாலுண்டான எரிச்சல், ஒருவரைப்பற்றி ஒருவருக்குப் பொறாமை, விசுவாசக் குறைவு, அன்புத்தாழ்ச்சி, இயேசுவின் நாமத்தை மற்றொருவன்*

*உபயோகிக்கக்கூடாதென்கிற தன்னயம், தங்களை ஏற்றுக்கொள்ளாத ஊராரை அழிக்கவேண்டுமென்கிற ஆங்காரம், சந்தேகம், உலக சிந்தை, தூக்கமயக்கம், பதஷ்டம், கோழைத்தனம், மறதி முதலான அநேக குறைவுகள் 'இயேசுவோடு இருந்த காலம் வரை' அவர்களில் காணப்பட்டன!*

*அப்படியானால், எஜமான் எடுத்துக்கொண்ட பிரயாசம் வீணாயிற்றோ? கடைசிபரியந்தம் இவர்கள் அவரையும் அவருடைய இராஜ்யத்தின் தன்மையையும் அறியவில்லையோ? இப்படிப்பட்டவர்களைக்கொண்டா தமது மகிமையின் ஊழியத்தை நடப்பிக்கப்போகிறார்? இவர்கள் கையிலா தமது இராஜ்யத்தை ஒப்புவிக்கப்போகிறாரென்று நாம் கேட்பது நியாயமே. ஆண்டவர் நமக்கு என்ன சொல்லுவார்?:*

> **ஆம், இவர்களைக்கொண்டே என் இராஜ்யத்தை ஸ்தாபிக்கப் போகிறேன். இவர்களே எனக்கு உத்தம அப்போஸ்தலராவார்கள். நான் இவர்களை அழைத்தபோது என்மீதுள்ள அன்பினால் எல்லாவற்றையும் விட்டு வந்தார்கள்! என் மாதிரியின்படி நடக்க ஆசையுடன் விரும்பினார்கள்!**
>
> *....இப்போது அவர்களிடத்தில் அநேக குறைவுகள் இருப்பது மெய்தான். அவைகள் என் உபதேசத்தினால் மாத்திரம் நீங்காது.* ***காலம் வரும், அப்பொழுது அவர்கள் உன்னத பலத்தால் நிரப்பப்படுவார்கள்.*** *அந்நாளில் என் மாதிரியின்படி நடக்கவும், என் உபதேசத்தை அறிந்து கொள்ளவும் அவர்களால் முடியும்! அவர்களில் எத்தனை குறைவுகளிருந்த போதிலும், அவர்கள் உள்ளத்தில் உண்மையிருப்பதால், நான் அவர்களிடத்தில் அன்பு வைத்தபடியே முடிவுபரியந்தம் அன்பாயிருக்கிறேன்! என்பார்.*

*ஆம், எஜமான் அவர்களுக்காக எடுத்துக்கொண்ட பிரயாசம் வீணாகமாட்டாது. படிப்படியாய் அவர்களைப் பக்குவப்படுத்தி வந்தார். நிலம் வாங்கியாயிற்று. பாதை பதித்தாயிற்று. ரெயில்வண்டிகள் தண்டவாளத்தின் மீது வரிசையாய் நிற்கின்றன. எல்லா பெரிய வேலைகளும் முடிந்திருக்கிறது. இப்போது என்ஜின் வந்து சேர்ந்தவுடனே வண்டிகள் ஓடுகிற அழகைப் பார்க்கவேண்டுமே!* **பெந்தெகொஸ்தே நாளில்** *இவர்கள் மேல்வீட்டில் காத்திருந்தபோது* **பரம அக்கினி** *இறங்கி அவர்களை நிரப்பிற்று. பலவீன மனுஷர், முற்றிலுமாய் மாற்றப்பட்டு வல்லமையுள்ள சாட்சிகளாகப் புறப்பட்டார்கள்! முன்னே காணப்பட்ட அநேக குறைகள் மறைந்தன! எஜமானைப்போல் அன்பும், சாந்தமும், தாழ்மையும், ஆத்ம வாஞ்சையுமுள்ளவர்களாக விளங்கினார்கள். அவரது அன்பின் சீஷர்கள், அன்று முதல் இன்றுள்ள*

*20-ம் நூற்றாண்டு வரை, அவரவர் காலங்களில் "தேவனுடைய பரிபூரண சித்தத்தை" ஜெயமாய் நிறைவேற்றியுள்ளார்கள்! அல்லேலூயா.*

*- பரமானந்தம் ஐயர்*

---

## தேவன் ஏற்படுத்திய 'ஸ்தல சபை'

*ஸ்தல சபையில் 'பிரிவினை சீர்கேடு' கூடாது*

*சபை என்றால் என்ன? என்ற கேள்விக்கு மிக எளிதான விடையை வேத புத்தகம் வழங்கியிருக்கிறது. அதன் விளக்கம் மிகத் தெளிவாய் இருக்கிறபடியால், நாம் யாதொரு குழப்பமடையத் தேவையில்லை. ஆரம்ப அப்போஸ்தலர் காலந்தொடங்கி வெளிப்படுத்தின விசேஷம் முதல் அத்தியாயம் வரை "எருசலேமிலுள்ள சபை" (அப்.8:1) என்றும், "கொரிந்துவிலுள்ள தேவனுடைய சபை" என்றும் (1கொரி.1:2; 2கொரி.1:1), "ஆசியாவிலுள்ள ஏழு சபைகள்" என்றும் (வெளி.1:4) கூறப்பட்ட வரிசையாக:*

*1) எபேசு சபை 2) சிமிர்னா சபை 3) பெர்கமு சபை 4) தியத்தீரா சபை 5) சர்தை சபை 6) பிலதெல்பியா சபை 7) லவோதிக்கேயா சபை*

*(வெளி.2:1-8,12,18; 3:1,7,14). ஆம், வேதாகமத்தில் காணப்படும் சபைகள் யாவும் தனித்தனியாய் வாழ்ந்தன. அவ்வாறு பிரிக்கப்பட்டு சபைகள் வாழ்ந்ததற்குரிய காரணம் என்ன? இதற்கு விடை ஒரே ஒரு சாரம்சம்தான்!*

> அது என்னவென்றால் "அந்தந்த ஸ்தலத்தை சார்ந்தே" சபைகளை தேவன் உருவாக்கினார். இவ்வாறு 'அந்தந்த ஸ்தலம்' என்பதைத் தவிர, வேறெந்த பிரிவினைக்கும் இடமில்லை!

*ஒரு நகரமென்று (City) இருந்தால், அங்கே ஒரே ஒரு ஸ்தல சபை உண்டு. கொரிந்து சபை, எபேசு சபை, கொலோசிய சபை ஆகிய அனைத்தும் வெவ்வேறு பட்டணங்கள்! ஒவ்வொரு பட்டணமும் தனித்தனி சபையின் எல்லையாய் இருக்கிறது. ஆகவே "**ஸ்தல சபை**" என்ற அடித்தளமே சபையைக் குறித்து வேதம் தந்த நிலைவரமான அடித்தள மாகும்! ஒரு சிறிய சபையாக இருந்தாலும் அதுவே ஸ்தல சபையாகும்! ஒரு பெரிய சபையாக இருந்தாலும், அதுவே ஸ்தல சபையாகும்!*

> எனவே 'ஸ்தல சபை' என்ற புனிதத்திற்கு மாறாக எந்த சிறிய மாறுதலும் இருந்தால் அதை ஒரு சபை என்று கூற இயலாது. அதுபோலவே ஒரு ஸ்தல சபையைவிட எதையாவது வைத்து பெரிய சபை என அழைத்துக்கொண்டாலும் அதுவும் கூட சபை என அங்கீகரிக்க முடியாது!

இதை மிகத் தெளிவாக 1கொரிந்தியர் 1ம் அதிகாரம் எடுத்துக்கூறிய "கொரிந்து சபை" எனக்கூறும் மகிழ்ச்சிக்கு ஆதாரம், அது ஒரு ஸ்தல சபை என்பதேயாகும்.

ஆனால், கொரிந்து சபையிலுள்ள சிலர் 1) நான் பவுலைச் சேர்ந்தவன் என்றும் 2) நான் அப்பொல்லோவை சேர்ந்தவன் என்றும் 3) நான் கேபாவைச் சேர்ந்தவன் என்றும் 4) நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவன் என்றும் அங்குள்ளவர்கள் சபையை நான்கு பிரிவாய் வைத்துக்கொண்டார்கள்.

*தனித்தனியான இவ்வித பிரிவை பவுல் வன்மையாய் கடிந்து கொண்டார்: பவுல் நல்லவர்தான்! அப்பொல்லோ நல்லவர்தான்! கேபா நல்லவர்தான்!..... இருப்பினும், அந்தந்த மனிதர்களைக் கொண்டு சபையை பிரிவினைப்படுத்துவது, எந்த சமயத்திலும் நல்லதல்ல! ஆகவே, அந்தந்த ஸ்தலத்தை ஆதாரமாய் வைத்தே 'ஸ்தல சபை' என்ற தனித்தன்மை கொண்டதாய் இருக்கலாமே அல்லாமல், அந்தந்த அப்போஸ்தலர்களை வைத்து சபைகளை கிளைகளாக பிரித்து வைப்பது தவறு! எனவே அப்போஸ்தலர்களை முன்வைத்து பிரிவினை ஏற்படுத்துவதை "மாம்சத்தின்படியான பிரிவினை" என்றே வேதாகமம் கண்டித்து புத்தி சொல்லுகிறது!*

அதுபோன்ற பிரிவினை, CULT அல்லது SECT என்ற தனிமனித ஆராதனையாகவே மாறிவிடும்! என்ற எச்சரிக்கையை அறிந்து, நீங்கள் தேவன் அங்கீகரிக்கும் 'ஸ்தல சபையில்' இருக்கிறீர்களா? என்பதை ஆராய்ந்து ஸ்திரப்படுத்திக்கொள்ளுங்கள்!

- வாட்ச்மென் நீ

---

## 'இருக்கும் நிலையில்' தேவனிடம் வந்து மனந்திரும்புங்கள்!

*நானாக நல்லவனாய் மாற இயலாது*

உங்கள் வெளித்தோற்ற நடவடிக்கைகளை சற்று சீரமைத்து விட்டு மனந்திரும்பியதாக எண்ணிக்கொள்ளாதிருங்கள்! மாறாக, உங்கள் **இருதயத்திலிருந்தே** காரியங்களை செவ்வைபண்ணி, உடனடியாக தேவனோடு சீர்பொருந்துங்கள்.

**நீங்கள் மனந்திரும்பாமலே, ஊழியங்களையோ அல்லது ஜெபங்களையோ "ஓர் சிபாரிசாக" தேவன் முன்பு வைத்திட முயற்சிக்காதீர்கள்!**

நீங்கள் கிறிஸ்துவிடம் வந்து நிற்பதற்கு, உங்களை ஏதாவது ஒரு நல்ல வழியில் சரிசெய்துகொண்டு அவரிடம் செல்ல வேண்டுமென்று ஒருபோதும் எண்ணாதிருங்கள். அதற்கு மாறாக, **நீங்கள் இருக்கும்**

**வண்ணமாகவே அவரிடம் வருவதுதான்** *உங்களை அவர் சீர்ப்படுத்த முடியும் என்பதை அறியுங்கள்.*

> **உங்களைக் குறித்து நீங்கள் எவ்வளவுதான் துயரமடைந்தாலும் "நீங்கள் மெய்யாய் மனந்திரும்பும் வரை" நிபந்தனை ஏதும் இல்லாமல் அவருடைய சித்தத்தை அப்படியே ஏற்றுக்கொள்ளும் வரை நீங்கள் ஒருபோதும் சீரடைய முடியாது!**

*.....நீங்கள் இன்னமும் தொடர்ச்சியாய் மோசமான நிலைக்கே செல்வீர்கள்! உங்களையே தேவனுடைய சர்வ வல்ல இரக்கத்திற்கு முற்றிலும் அர்ப்பணிக்காத பட்சத்தில், உங்களிடமிருந்து யாதொரு நற்செயலையும், அது ஊழியமேயானாலும், அவர் ஏற்றுக்கொள்ள மாட்டார்!*

*உங்களை "ஓர் நீதிமானாக்கப்பட்ட நிலையில்" இருப்பதாக எண்ணி உங்களையே வஞ்சித்துக் கொள்ளாதிருங்கள். அதுஏனென்றால், நீங்கள் மெய்யாகவே அந்த நிலையில் இல்லை என்பதை 'நீங்களே' அறிந்திருக்கிறீர்கள் என்பதுதான்! உங்கள் மனசாட்சியே உங்களை குற்றவாளியாக தீர்க்கிறபடியால், தேவனும் அவ்வாறே உங்களை ஆக்கினைக்குட்படுத்துவார் என்பதையும் 'நீங்களே' அறிந்திருக்கிறீர்கள்! இப்போதுள்ள உங்கள் நிலையில் அவர் உங்களை நீதிமானாக்கினால், தேவன் பிழை செய்கிறார் என்பதையும் 'நீங்களே' அறிந்திருப்பீர்கள்! ஆகவே, நீங்கள் இருக்கும் வண்ணமாகவே* **உங்களின் அனைத்து வெட்கங்களையும், உங்களின் அனைத்து குற்றங்களையும் அப்படியே உங்களுக்குரியதாய் ஏற்றுக்கொண்டு, நீங்கள் இருக்கும் இதே நிலையில்** *அவரிடம் வாருங்கள்! இப்போதுதான், கோடாரி வேரில் விழுந்து 'அந்த கொடியவன்' சாயும் நிகழ்ச்சி நடைபெறும் (லூக்கா.3:9).*

*இப்போது, நீங்கள் தேவனைவிட்டு எவ்வளவு தூரம் சென்றிருந்தாலும், இன்னமும் அவர் உங்களை நேசிக்கிறார் என்பதை விசுவாசியுங்கள்! "நித்திய அன்பினால்" உங்களை அன்புகூர்ந்த படியினால்தான், மெய்யான மனந்திரும்புதலை காண்பித்து, உங்களை மீண்டும் தம்மிடம் இழுத்துக்கொள்ள தேவன் வாஞ்சிக்கிறார்! இவ்வாறு உங்களிடம் "மெய்யான மனந்திரும்புதலுக்கு" கிரியை செய்த தேவன், நல்லவர்! அன்புள்ளவர்! என்றே, உள்ளம் மகிழ அறிக்கை செய்யுங்கள்!*

*- சார்லஸ் G. பின்னி*

## அவர், உத்தம வேதபோதகர்தானா?

*'அவரை' இனம் காண பத்து அடையாளங்கள்*

**வி**சுவாச துரோகம் நிறைந்த இந்த கடைசி காலத்தில் ஒரு வேத போதகனாகிய நான், என்னை எப்படி உத்தம போதகனாய் காத்துக் கொள்ள வேண்டும்? என்ற தியானத்தில், என்னை நிலைநிறுத்திக் கொள்ள ஆர்வமுடன் வாஞ்சித்து நான் பெற்றுக்கொண்ட சத்தியங்களின் 10-குறிப்புகள்:

1. உத்தம வேத போதகன், **மக்களை தன் பக்கமாய் கவராமல்** தேவனுடைய வார்த்தைமீதே நேசங்கொள்ளச் செய்கிறார். தங்களது போதகர் எவ்வளவு நல்லவராயினும் அவரும் தவறக்கூடியவர்தான்.... ஆனால், வேத வாக்கியம் மட்டுமே தவறாய் போவதில்லை என அவரது போதகம் கேட்பவர்கள் அறிந்திருக்க நாடுகிறார்! (ரோமர் 3:4, அப்.17:11, லூக்கா 18:18,19).
2. உத்தம வேத போதகன் பயமோ, பாரபட்சமோ இல்லாது தேவ வசனத்தைப் போதிப்பார். **தன் கையில் பிடித்திருக்கும் வேதம் இருபுறமும் கூர்மையான பட்டயம்** என்றும், அவர் அறிவார். அவர் சத்தியத்தை அன்போடும், கண்டிப்பாகவும், கண்ணியமாகவும் பேசுவார்! பிரபல்ய போதகர்கள் என்ன விசுவாசிக்கிறார்கள், என்பதைவிடச் சத்திய வசனம் என்ன சொல்லுகிறது? என்பதே போதகத்தை கேட்பவர்களுக்கு முக்கியமாய் இருந்திட நாடுவார்! (மத்.22:16, எபி.4:12, எபே.4:15, மத்.15:3-6).
3. உத்தம வேத போதகன், வேதத்தில் தனக்குப் பிடித்தமான ஒரு சில வசனங்கள், கருத்துக்களை மட்டுமே போதிப்பதைத் தவிர்த்து, "**தேவனது முழு ஆலோசனையையும்**" அறிவிப்பதிலேயே கவனமாய் இருப்பார். சத்திய போதகத்தில் அவர் ஒன்றையும் குறைப்பதில்லை, கூட்டுவதில்லை, மாற்றுவதில்லை! அவரது போதனை ஆவியோடும், உண்மையோடும் இருக்கும். அது, உணர்வுகளற்ற வறட்டு உபதேசங்களாகவோ, உபதேசங்களற்ற வெற்று உணர்வுகளாகவோ இல்லாமல், அவர் **சமநிலையில் போதித்து** செயல்படுவார் (அப்.20:26,27, மத்.5:19, யோ.6:63, எரே.1:9,10).
4. உத்தம போதகன், எது சரி, எது தவறு என்று சுட்டிக்காட்டுவதோடு நிறுத்திவிடாமல், **ஜனங்களே பகுத்தறிந்து** வித்தியாசம் காணும்படி பயிற்சியளிப்பார்! (யோவான் 2:18-22, எபி.5:13,14).
5. அவர், மக்களது **முகத்துதியை ஏற்றுக்கொள்ளாமல்,** அவர்களது ஆன்மீக நிலை ஒன்றைக் குறித்தே கவனம் கொண்டிருப்பார்!

*அல்லாமல், அவர்கள் தரும் காணிக்கை நிமித்தம், சற்றேனும் தன் கவனத்தை திருப்ப மாட்டார்! (யோவான் 3:1-3, அப்.20:33).*

6. *உத்தம வேதபோதகன், தனது சொந்த ஊழியம் விரிவடைவதைக் குறித்தே பிரதானமாக அக்கறை கொள்ளாமல், கிறிஸ்துவின் சரீரமான சபையின் வளர்ச்சி நிலையைக் குறித்தே பாரங்கொண்டிருப்பார். நற்செய்தி ஊழியத்தில், தன் பொறுப்பிலுள்ள மக்கள், தங்கள் பங்கை நிறைவேற்ற அவர்களைப் பக்குவப்படுத்துவார்! இவ்வித* **பயிற்சி அளிப்பதை** *தனது தலையாய கடமையாய் கொண்டிருப்பார். சபையிலுள்ள பிற ஊழியர்களையும் மதித்து நடத்துவார்! (எபே.4:11-13, 1கொரி.12:21).*

7. *அந்த உத்தம வேத போதகன், வேதத்திலிருந்து, தான் போதிப்பவைகளுக்கு ஒப்பாய் தன்னையும் பரிசுத்தப்படுத்தித் திருத்திக்கொள்கிறேனா? என்று* **அடிக்கடி தன்னை சோதித்துப் பார்ப்பார்!** *போதகன் என்ற பொறுப்பில், தனக்கு நியாயத்தீர்ப்பு கடினமாயிருக்குமென அவர் எச்சரிக்கையான நினைவுடையவராய் இருப்பார்! (ரோ.2:17-24, 1கொரி.9:27, யாக்.3:1).*

8. *அந்த உத்தம வேதபோதகன் 'முடிவுவரை' கற்றுக்கொள்பவனாயிருக்கிறபடியால், ஆழ்ந்த ஆவிக்குரிய புத்தகங்களை படித்துக் கொண்டே இருப்பார்! எவ்வளவு படிக்கிறாரோ அவ்வளவு* **தனது அறியாமையை உணருவார்!** *அவசரப்படாத ஜெபத்துடன் அமர்ந்திருக்கும்* **வேத தியான வேளைகளை** *முக்கியமற்ற காரியங்கள் திருடிவிட அந்த உத்தம வேத போதகன் அனுமதிப்பதில்லை! (1தீமோ.4:13, 2தீமோ 4:13, அப்.6:2-4).*

9. *அந்த உத்தம வேத போதகன், தன் சாதாரண உடன் போதகர்கள் மற்றும் முதிர்ந்த தேவ மனிதர்களின்* **திருத்தங்களுக்கும், ஆலோசனைகளுக்கும்** *மனப்பூர்வமாய் தன்னை ஒப்புக்கொடுப்பார். அவர் வலியுறுத்திக் கூறுபவராய் இருக்கலாம்! ஆனால், அகம்பாவக் காரராய் இருக்கமாட்டார்!! (அப்.13:1,2, 15:6, 2தீமோ.2:24).*

10. *அந்த உத்தம வேத போதகன்,* **சத்திய பிரகடன ஊழியம்** *தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதில் கரிசனை கொண்டுள்ளதால், சத்திய வேத போதனைகளை தீவிரமாய் மற்றவர்களுக்கு கொண்டு சேர்க்கும்* **உண்மையுள்ள மனிதரைத் தேடுவதில் கவனம் செலுத்துகிறார்!** *வேதத்தைப் படிக்கும் தனது முறைகளையும், பயன்படுத்தும் உதவி நூல்கள் மற்றும் சாதனங்களையும் மறைத்து, ரகசியமாய் வைத்துக்கொள்ள மாட்டார்! அவர் போதிக்கப்பட்டு போதிக்கிறார்! (2தீமோ.2:2, தீதி.4:1-4). ஆமென்!*

*- R.ஸ்டான்லி BYM*

## ‘கர்த்தரின் கிருபைகளை’ பாடிக்கொண்டாடுங்கள்!

*அது, அவரின் ‘உத்தமத்தை’ ருசித்தோரின் பங்கு*

*‘கர்த்தரின் கிருபைகளை’ நான் என்றென்றைக்கும் பாடுவேன்! என தாவீது கூறிய பேரின்பம், நம் யாவருக்கும் சொந்தமானது (சங்கீதம்.89:1). எப்படியெனில், துன்பங்கள் வியாகுலங்கள் மத்தியில் கடந்து செல்லும் நாம் “அவரது உண்மையை அல்லது உத்தமத்தை” ருசித்ததேயாகும். பாடுகள் மத்தியில் என்னை தனியே விட்டுவிடாமல்,* **“தேவன் உண்மையுள்ளவராய்”** *இருந்து என்னை காத்தார்! என அறிந்தவனுக்கே கர்த்தர் தமது கிருபைகளை மகிழ்வுடன் அளிக்கிறார்! (வசனம்.1).*

*‘தங்களை அண்டிய துன்ப நேரத்தில் முறுமுறுத்து அழிந்தார்கள்!’ என வருத்தமுடன் 1கொரிந்தியர்.10:10 கூறும் மக்களாய் நாம் இருந்திடக்கூடாது! கிருபையைப் பெற்றிடும் நற்செய்தியோ அடுத்த 13-ம் வசனத்தில் காண்கிறோம். அந்த பக்தர்கள், எந்த கடின சூழ்நிலையிலும் “தேவன் உண்மையுள்ளவர்” என தங்கள் வாழ்வில் நிரூபித்து ருசித்தவர்கள்! எப்படியெனில்:*

1. *தங்களுக்கு நிகழ்ந்த துன்பம் ‘சோதனை’ மாத்திரமே....*
2. *தங்களுக்கு ஏற்பட்ட இந்த ‘சோதனை’ எல்லா மனுஷருக்கும் உரிய சகஜமானதே, என தாழ்மையாய் ஏற்றுக்கொண்டவர்கள்!*

*இவ்வாறு ஏற்றுக்கொண்டவர்களே, “தேவன் மீது அசையாத விசுவாசம்” கொண்டவர்கள்! சோதனை நேரத்தில் இந்த பணிந்த ஆவியைக் கொண்ட இவர்களே ‘தேவன் உண்மையுள்ளவராய்’ தங்களோடு இருந்தார் என்பதை 3-பகுதிகளாகக் கண்டு ருசித்தார்கள்:*

1. *திராணிக்கு மேலாக நாங்கள் சோதிக்கப்பட தேவன் இடம் தரவில்லை!*
2. *சோதனையை தாங்கிக் கொள்ளும் ‘பெலனை’ தந்தார்!*
3. *சோதனையை மேற்கொண்டு வரும் ஜெயத்தையும் அருளினார்!*

*இத்தனை அரிய அவரது உத்தமத்தை, கர்த்தர் தமது சொந்த பிள்ளைகளுக்கே காண்பிக்கிறார்!* **கர்த்தரின் மகா உண்மையின்** *பேரின்பத்தை, தலைமுறை தலைமுறையாய் தங்கள் சந்ததிகளுக்கும் அறிவித்திடும் மகிழ்ச்சி நிறைந்த இவர்கள் பாக்கியவான்கள்! மாத்திரமல்ல, தங்கள் வாழ்வில் கர்த்தரின் கிருபைகளை ஏராளமாய் பெற்றபடியால், அதைப் பாடி கொண்டாடும் சிலாக்கியமும் பெற்றிருந்தார்கள்! (சங்.89:1). அல்லேலூயா.*

*- T.ரத்தினகுமார்*

## அழிந்த 'டைட்டானிக் கப்பலின்' அழியாத சுவிசேஷ சாட்சி
# ஜான் ஹார்ப்பர்!



1912 ஏப்ரல் மாதம் ஸ்காட்லாந்து தேச ஜான் ஹார்ப்பர் தன்னுடைய 6-வயது கொண்ட நானா மகளோடும், ஜெஸி என்ற தன் சித்தப்பா மகளோடும், அமெரிக்காவுக்குச் சென்ற 'மிகப்பெரிய டைட்டானிக் (TITANIC) கப்பலில்' பயணமாய் புறப்பட்டார்! சிக்காக்கோ நகரில் உள்ள ஒரு சபையில் 3-மாதங்கள் பிரசங்கித்து போதிக்க அழைக்கப்பட்டிருந்தார். அன்று, 1912 ஏப்ரல் 14-ம் தேதி நள்ளிரவு சுமார் 11.40 நிமிட அளவில் "எக்காலத்தும் மூழ்கடிக்க முடியாத கப்பல்" என பெயர் பெற்ற அந்த மாபெரும் கப்பல், மறைவாக இருந்த பனிப்பாறையில் மோதி சேதம் அடைந்தது. அவ்வளவு ஸ்திரமான அந்த கப்பலில் பல கீறல்கள் ஏற்பட்டு கடல் நீர் வேகமாக கப்பலுக்குள் நுழைந்தது. ஜான் ஹார்ப்பர் துரிதமாய் செயல்பட்டு தன் மகள் நானாவையும், தன் சித்தப்பா மகளையும் கப்பலிலிருந்து இறக்கப்பட்ட 11-வது 'உயிர்காப்பு படகில்' அனுப்பி வைத்துவிட்டு, கப்பலின் பேரழிவிலிருந்து தப்பிச் செல்ல அலைமோதி கொண்டிருக்கும் ஜனங்களுக்கு உதவும்படி ஓடினார்!

"ஸ்திரீகளும், குழந்தைகளும், இன்னமும் இரட்சிக்கப்படாதவர்களும் தப்பிச் செல்ல சீக்கிரமாய் வாருங்கள்!" என உரத்த சத்தமாய் அழைத்து அவர்களை 'உயிர் காக்கும் படகில்' ஏற்றி அனுப்பி வைத்தார். 20 உயிர்காக்கும் படகுகளில் 18 படகுகள் பயணிகளை ஏற்றிச் சென்றது. மூழ்கி கொண்டிருக்கும் அந்த கப்பலில் ஜான் ஹார்ப்பர் உட்பட 1528 பயணிகள் மீதியாய் இருந்தனர். உயிர்காக்கும் படகு இனி இல்லாதபடியால், உயிருக்கு பயந்த சிலர் கடலில் குதித்துவிட்டார்கள். குளிரில் உடல் விறைத்து தத்தளித்த அவர்களிடம் கடலில் குதித்து ஜான் ஹார்ப்பர் நீந்திச் சென்றார். மரித்து கொண்டிருந்த ஒவ்வொருவரிடமும் நீந்திச்சென்று "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசியுங்கள், அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்" என கூறிக்கொண்டே இருந்தார். கப்பலின் சில குப்பைகளை பிடித்து நீந்திக் கொண்டிருந்த ஒரு வாலிபனிடம் "நீ ஆண்டவர் இயேசுவின் மூலம் இரட்சிக்கப்பட்டு விட்டாயா?" என்ற கேள்விக்கு அந்த வாலிபன் 'இல்லை' எனக் கூறினான். அச்சமயத்தில் வந்த ஒரு பேரலை அந்த வாலிபனை இழுத்துக்கொண்டு சென்றுவிட்டது. சிறிது நேரத்தில் மீண்டும் அடித்த பேரலையில் அதே வாலிபன் ஜான் ஹார்ப்பருக்கு முன்பாக தூக்கி வீசப்பட்டான். உடனே ஜான் ஹார்ப்பர் "நீ இரட்சிக்கப்பட, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி" எனக்கூறியவுடன், அந்த வாலிபன் நான் மெய்யாகவே விசுவாசிக்கிறேன் எனக்கூறினான்! மகிழ்ச்சியடைந்த ஜான் ஹார்ப்பர் தன்னுடைய குளிர்பாதுகாப்பு மேலாடையை அவனுக்கு உடுத்துவித்து, 39 வயது நிறைந்த ஜான் ஹார்ப்பர் கடலில் மூழ்கி மரித்துவிட்டார்! டைட்டானிக் கப்பலும் ஆழத்தில் மூழ்கிவிட்டது!

டைட்டானிக் கப்பல் மூழ்கி 100 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன. அழிந்து விட்ட கப்பலின் சில பகுதிகள் 'அருங்காட்சியகத்தில்' இன்றும் வைக்கப்பட்டுள்ளது! ஆனால் ஜான் ஹார்ப்பர் மூலமாய் பரலோகத்தில் இருக்கும் சில ஆத்துமாக்கள் 'ஜான் ஹார்ப்பரின் துணிவான சுவிசேஷ அறிவிப்பை' கொண்டாடிட பரலோகத்தில் மகிழ்ச்சியாய் இருக்கிறார்கள்!

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## தாமதமாகிவிட்ட அந்த ஒரு இரவு!

ஓர் இரவில் நடைபெற்ற எழுப்புதல் கூட்டம் ஒன்றில், ஒரு வாலிபப் பெண் மனந்திரும்பும்படியாக வற்புறுத்தப்பட்டாள். அவளுடைய இரட்சிக்கப்பட்ட தாய், மனந்திரும்பாத தன் மகளுக்காக மிகவும் பாரமடைந்து துயரப்பட்டுக் கொண்டிருந்தாள். கடைசியாக அவள் தன் மகளிடம் வந்து, “அன்பு மகளே, நீ செல்லும் பாவ வழி கொடியது! உன் எதிர்காலம் இருளாய் மாறும் அபாயம்! தயவாய், இந்த கூட்டத்திலாவது நீ மனம்திரும்பி கர்த்தரிடம் வந்து விடு” என அவளை மிகவும் இரக்கமாகக் கெஞ்சி மன்றாடினாள். ஆனால் அவளோ அவ்விதம் செய்ய மறுத்து விட்டாள்.

மாறாக, **“நாளை இரவு நான் கர்த்தரைத் தேடுவேன்”** என்று கூறினாள். அடுத்த நாள் சாயங்காலத்தின்போது, அவள் ஒரு நடன அரங்கிற்குச் செல்லத் தன்னை ஆயத்தம் செய்து கொண்டிருப்பதை அவள் தாய் கண்டாள். அந்த தாய், மகளைப் பார்த்து “மகளே, நீ இவ்விதம் போகலாகாது” என்று கூறித் தடுத்தாள். அதற்கு அவள் “நான் செத்தாலும் நடன அரங்கிற்குப் போவேன்” என்று கூறிக்கொண்டு மாடிக்கு ஏறிச் சென்றாள். நடனச்சாலைக்கு ஒரு காரில் அவளை அழைத்துக் கொண்டு செல்ல வந்த வேலையாள் சென்ற பின், தாயும் ஒரு காரில் அங்கு சென்றார். சிறிது நேரம் சென்றபின் அந்த தாய் தன் மகளை கைபேசியில் அழைத்து கூப்பிட்டபோது அவளிடமிருந்து பதில் ஏதுமில்லை. அவள் தாய் மாடிக்குச் சென்று தன் மகளைப் பார்த்தாள். அவள் கண்ணாடி ஒன்றின்முன் தன்னை அலங்கரித்த நிலையில் உட்கார்ந்திருந்தாள். அவள் கரங்கள் தனது கூந்தலைக் கட்டியவாறு ஒரு ரிப்பனை (Ribbon) பிடித்துக்கொண்டிருந்தது. ஆனால் அந்தோ! அவள் பிணமாக உட்கார்ந்து கொண்ருந்தாள். அவள் ஜீவன் பிரிந்து சென்றிருந்தது. இப்பெண் ஒரு இரவு மட்டும் தனக்கு தாமதமாய் கேட்டிருந்தாள்! ஆனால் அது மிகவும் பிந்தியதாய் இருந்தது!

இந்த நடந்த நிகழ்ச்சி **“இன்றைக்கு இரட்சண்ய நாள்!”** என்ற வேதவாக்கியத்தை எவ்வளவு நிரூபணமாக்கியுள்ளது. ஓ வாலிபனே, காலம் கடந்து போகும் முன்பு, இன்றே தயவாய் மனந்திரும்பி இரட்சிக்கப்படுவாயாக!

- சுவிசேஷ மலர்

சந்தா அனுப்ப QR பயன்படுத்தவும்

maduraichristianfellowship@indianbk

பரலோக பொக்கிஷங்கள்

Published and Owned by:
Madurai Christian Fellowship, Regd Society,
*Editor* T.Rathnakumar, Madurai.
Printed by SFA Print (P) Ltd., Sivakasi.